**கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபை – 2017**

-----------------------------------------------------------------------------------

கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1973 இன் 10 ஆம் இலக்க கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

-----------------------------------------------------------------------------------

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

-----------------------------------------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகார சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து, கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் - 02**

நியமத்தின் 56 ஆம் பந்தியின் பிரகாரம், காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றின் கூறுகள் வெளிப்படுத்தப்படல் வேண்டும். எவ்வாறாயினும், அதிகாரசபை மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் அந்தக் கூறுகளினை வெளிப்படுத்தியிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் - 07**

நியமத்தின் 65 ஆம் பிரிவின் பிரகாரம், நடைமுறையல்லாச் சொத்துக்களின் பயன்படு ஆயட்காலம் வருடாந்தம் மீளாய்வுசெய்யப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவொன்றாக, ரூபா 4,624,280 பெறுமதியுடைய சொத்துக்கள், அந்த சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த போதிலும் இதுவரை பயன்பாட்டில் காணப்பட்டன. இருப்பினும், இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் - 03 இன் பிரகாரம் இந்த மதிப்பீட்டு பிழையினை கண்டறிவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய ரூபா 2,129,270 தொகையான நிலையான வைப்புக்கள் மீதான வட்டி கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 ஆம் ஆண்டில் கொள்வனவுசெய்யப்பட்ட தளபாடம் மற்றும் பொருத்துக்களின் பெறுமானத்தேய்வு ரூபா 67,390 தொகையாகக் காணப்பட்ட போதிலும், கணிப்பீட்டுப் பிழைகள் காரணமாக அந்தத் தொகை ரூபா 144,330 ஆகக் கணக்கிடப்பட்டிருந்தது. அதன் விளைவொன்றாக, மீளாய்வாண்டின் மிகைகள் ரூபா 76,940 இனால் குறைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(இ) நிகழ்ச்சித்திட்டங்களினை அமுல்படுத்தும்பொருட்டு, மீளாய்வாண்டின் போது திறைசேரியிடமிருந்து ரூபா 10,000,000 தொகையான மூலதன மானியங்கள் பெறப்பட்டிருந்தது. இருப்பினும், பெறப்பட்ட தொகை மற்றும் அவற்றிற்கு ஏற்பட்ட செலவினங்களுக்கிடையேயான வித்தியாசம் ரூபா 4,511,414 தொகை செயற்திட்டத்திலிருந்தான மிகைகளாக நிதிச் செயலாற்றல் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. பெறப்பட்ட மானியங்களில் ரூபா 2,309,950 இற்கு கொள்வனவுசெய்யப்பட்ட நடைமுறையல்லாச் சொத்துக்கள், மூலதன மானியங்களின் கீழ் கணக்கிடப்பட்டிருப்பதற்குப் பதிலாக ஆண்டின் வருமானமொன்றாக கணக்கிடப்பட்டிருந்தது.

(ஈ) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்காக செலுத்தவேண்டிய வாடகைக்கான ஏற்பாடுகள் தொடர்புடைய ஆண்டுகளின் போது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், அது தொடர்பில் மீளாய்வாண்டின் போது ரூபா 9,293,265 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களில் பின்னோக்கி சரிப்படுத்தப்படுவதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கிடப்பட்டிருந்தது.

### 2.2.3 விபரிக்கப்படாத வித்தியாசங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான கூட்டு ஆதன தகவல் நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஏற்பட்ட செலவினம் ரூபா 5,488,586 தொகையாகக் காணப்பட்டதுடன் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவற்றிற்கு ஏற்பட்ட செலவினம் ரூபா 9,367,000 தொகையாகக் காணப்பட்டது. ஆகையினால், இரண்டு பதிவுகளுக்குமிடையே ரூபா 3,878,414 வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டிற்கு ஏற்படவுள்ள செலவினத்தின் அடிப்படையில் செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்தது என 2018 ஆகஸ்ட் 20 இல் எனக்கு தலைவர் அறிவித்திருந்தார்.

(ஆ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 ஆம் ஆண்டில் கொள்வனவுசெய்யப்பட்டிருந்த கருவிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 696,017 தொகையாகக் காணப்பட்ட போதிலும், நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்ட அந்த கருவிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 684,326 தொகையாகக் காணப்பட்டது. ஆகையினால், பதிவேட்டில் காட்டப்பட்ட பெறுமதி ரூபா 11,691 இனால் மிகைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது.

### 2.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியான கடன்பட்டோர் மீதி ரூபா 23,157,468 தொகையாகக் காணப்பட்டதுடன் 05 வருடங்களுக்கும் மேலாக 06 கடன்பட்டோர்களிடமிருந்து பெறப்படவேண்டிய ரூபா 2,930,200 கடன்பட்டோர் மீதிகள்கூட அவற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பொருட்களினைக் கொள்வனவுசெய்வதற்கு 1999 ஆம் ஆண்டில் தனியார் கம்பனியொன்றிற்கு செலுத்தப்பட்ட ரூபா 807,187 தொகையொன்றுகூட மேற்குறித்த மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்தது. பொருட்களினைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் செலுத்துகை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக 18 வருடங்களாக கடனினை அறவிடுவதற்கு அதிகாரசபை தவறியிருந்தது.

(ii) 02 அரச வைத்தியசாலைகளில் பம்ப் வீடுகளின் (Pump houses) பராமரிப்புக்கு 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபைக்கு கிடைக்கப்பெறவேண்டிய ரூபா 8,202,098 தொகையொன்று காணப்பட்டதுடன் அதில் ரூபா 346,645 பெறவேண்டிய தொகை 05 வருடங்களினை விடவும் பழைமை வாய்ந்ததாகக் காணப்பட்டது. அந்த பராமரிப்பு செயற்பாடுகள் அதிகாரசபையின் வரம்பின் கீழ் வராது காணப்பட்டதுடன் நிலுவைகளினை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராது அந்த பெறவேண்டியவைகள் கடன்பட்டோர்களாக கணக்கிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்தவேண்டியவைகள் ரூபா 3,105,915 தொகையாகக் காணப்பட்டதுடன் 2012 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்ட ரூபா 774,134 மீதியொன்றை அது உள்ளடக்கியிருந்தது. எவ்வாறாயினும், அந்த செலுத்தவேண்டியவைகளினை தீர்ப்பனவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. பணிப்பாளர் சபையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் அந்த செயற்பாடுகளினை இறுதியாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமென 2018 ஆகஸ்ட் 20 இல் தலைவர் எனக்கு அறிவித்திருந்தார்.

(இ) அங்கீகரிக்கப்படாத நிர்மாணங்களினை அகற்றுவதற்கு 2011 ஆம் ஆண்டில் ரூபா 350,568 தொகையான முற்பணமொன்றை அதிகாரசபை செலுத்தியிருந்ததுடன் அந்த முற்பணம் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் தீர்ப்பனவுசெய்யப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான ரூபா 23,157,468 தொகையான கடன்பட்டோர் மீதிகளுக்கான மீதிகளின் உறுதிப்படுத்தல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான கூட்டு ஆதனங்களிலுள்ள அங்கீகரிக்கப்படாத நிர்மாணங்களுடன் தொடர்புடைய விபரங்கள் மற்றும் அதிகாரசபைகள் சட்டத்தின் 5(ஏ) பிரிவின் பிரகாரம் உள்ளூராட்சி சபைகளுக்கு கையளிப்பதற்கு பட்டியலிடப்பட்ட ஆதனங்களின் நிலமைகளுடன் தொடர்புடைய தகவல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 2003 இன் 24 ஆம் இலக்க கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபைச் சட்டத்தின் (திருத்தப்பட்டது) 5 ஆம் பந்தியின் (ஏ) ஆம் பிரிவு | கூட்டு ஆதனங்களின் பராமரிப்பு செயற்பாடுகளினை உள்ளூராட்சி சபைகளுக்கு கையளிப்பது அதிகாரசபையின் நோக்கங்களில் ஒன்றாகக் காணப்பட்ட போதிலும், மாளிகாவத்தை, ஹிபுடு உயன, ரனல, மெத்தகொட மற்றும் ஜல்தாரா வீடமைப்புத் திட்டங்களின் பராமரிப்பு செயற்பாடுகள் உள்ளூராட்சி சபைகளுக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் | உழைக்கும் போதே செலுத்தும் வரி கணிப்பிடுகையில், எரிபொருள் மற்றும் தொலைபேசிப் படிகள் வரிவிதி வருமானத்திற்கு சரிப்படுத்தப்படல் வேண்டும். எவ்வாறாயினும், உழைக்கும் போதே வரியின் செலுத்துகை, எரிபொருள் படிகளினை சரிப்படுத்தியிராது கணிப்பிடப்பட்டு செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| | (i) நிதிப் பிரமாணங்கள் 454(1) | இருப்பு வகைகளின் பெறுகை மற்றும் விநியோக இருப்பு பதிவேடு, பொது படிவம் 44 இல் பதிவுசெய்யப்படவேண்டியதுடன் பல்வேறு பிரிவுகளுக்கு மற்றும் உத்தியோகத்தர்களுக்கு விநியோகிக்கப்பட்ட வகைகளுக்கான விநியோகப் பட்டியல்கள் தனித்தனியாக வைத்திருக்கப்படவேண்டியதுடன் பதிவு செய்யப்பட்டிராது காணப்பட்டது. அதிகாரசபையின் பல்வேறு பிரிவுகளுக்கிடையே இருப்பு வகைகள் பரிமாற்றஞ் செய்யப்பட்டுக் காணப்பட்ட போதிலும், அந்த பரிமாற்றங்களின் அறிக்கையிடலுக்கு முறையான நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நிதிப் பிரமாணம் 454(2) | அதிகாரசபையின் கட்டிடங்களிலுள்ள மின் பொருத்திகள் மற்றும் மின் உதிரிப்பாகங்கள் தொடர்பில் மின் பொருத்திகளுக்கான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை<br>-------------------------------------------------------------<br>II ஆம் அத்தியாயம் 13.3 ஆம் பந்தி | நிரந்தர நியமனம் ஒன்று மேற்கொள்ளும் வரை தற்காலிக நடவடிக்கை ஒன்றாக மாத்திரமே பதில் கடமை நியமனம் செய்யப்பட வேண்டும். எனினும், அதிகாரசபையின் 04 உத்தியோகத்தர்கள் கடமைகளினை மேற்கொள்வதற்கு நியமிக்கப்பட்டிருந்ததுடன் அந்த உத்தியோகத்தர்களின் பதில் கடமைக் காலம் 02 தொடக்கம் 06 வருடங்கள் வரையிலான வீச்சில் காணப்பட்டது. 2017 ஆம் ஆண்டிற்கு பதில்கடமை படிகளாக அதிகாரசபையினால் ரூபா 331,668 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கு திருத்தங்களினை மேற்கொண்ட பின்னர் மீதமாகவுள்ள வெற்றிடங்களினை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தலைவர் எனக்கு அறிவித்திருந்தார். |
| (உ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தி | நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களுக்குள் இறுதி கணக்குகள் மற்றும் வரைபு ஆண்டறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்கான வரைபு ஆண்டறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் 3.2.5 ஆம் பந்தி | 2017 ஆம் ஆண்டின் வருடாந்த பொருள் அளவைச்சபை அறிக்கையில் அழிவடையக்கூடிய மற்றும் அகற்றப்படக்கூடிய வகைகள் அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும், அகற்றல் செயற்பாடுகள் சுற்றறிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அதிகாரசபையின் மிகைகள் ரூபா 98,384,642 ஆகக் காணப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான மிகைகள் ரூபா 70,410,879 ஆகக் காணப்பட்டது. ஆகையினால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகாரசபையின் நிதிசார் விளைவு ரூபா 27,973,763 முன்னேற்றமொன்றை சுட்டிக்காட்டியது. செயற்பாட்டு வருமானம் மற்றும் செயற்பாடற்ற வருமானம் முறையே ரூபா 51,934,856 மற்றும் ரூபா 9,566,391 இனால் அதிகரித்தமை நிதிசார் விளைவின் குறித்த முன்னேற்றத்திற்கு பிரமானமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்கையில் 2013 ஆம் ஆண்டில் பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. ஆனால், மீதமாகவுள்ள ஆண்டுகளில் அது மிகைகளாக மாறியது. எவ்வாறாயினும், ஊழியர்களுக்கான ஊதியம், அரச வரிகள் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்கள் மீதான பெறுமானத்தேய்விற்கான சரிப்படுத்துகைகளினை மேற்கொண்ட பின்னர் 2014 ஆம் ஆண்டில் ரூபா 95,711,528 ஆகக் காணப்பட்ட நிறுவகத்தின் ஒட்டுமொத்த பங்களிப்பு மீளாய்வாண்டில் ரூபா 189,198,902 வரை முன்னேற்றமடைந்து காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் அந்த முன்னேற்றம் 30 சதவீதமாகக் காணப்பட்டது.

**3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், செயற்திட்ட சேவைகள் வருமானம் மற்றும் பராமரிப்பு மற்றும் திருத்தங்களிலிருந்தான வருமானம் முறையே ரூபா 11,000,208 மற்றும் ரூபா 2,012,857 இனால் அதிகரித்திருந்ததுடன் அலுவலக வாடகை ரூபா 15,136,227 இனால் அதிகரித்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான அதிகாரசபையின் தேறிய சொத்துக்கள் ரூபா 201,174,221 தொகையாகக் காணப்பட்டதுடன் தொடர்புடைய முன்னைய ஆண்டின் தேறிய சொத்துக்கள் ரூபா 102,789,579 தொகையாகக் காணப்பட்டது. ஆகையினால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், தேறிய சொத்துக்கள் ரூபா 98,384,642 இனால் அல்லது 96 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான விரைவுச் சொத்துக்கள் விகிதம் 3:1 ஆகக் காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டில் அந்த விகிதம் 2:1 ஆகக் காணப்பட்டது.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

**4.1.1 செயற்பாடும் மீளாய்வும்**

(அ) அரச, தனியார் மற்றும் சுனாமி கூட்டு ஆதனங்களுடன் தொடர்புபட்ட முகாமைத்துவ கூட்டிணைப்புக்கள் மற்றும் குழுக்களின் பதிவு மற்றும் செயற்பாடற்ற குழுக்கள் / செயற்படுத்தல் பதிவின் செயலாற்றல் 45 சதவீதமாகக் காணப்பட்டதுடன் சுனாமி கூட்டு ஆதனங்களுடன் தொடர்புடைய அந்த நோக்கத்தின் அடைவு தாழ்ந்த மட்டத்தில் காணப்பட்டது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அதிகாரசபையின் நோக்கங்களினை அடைந்துகொள்ளும் பொருட்டு, ரூபா 8.192 மில்லியன் ஏற்பட்டதன் மூலம் பயனாளிகளுக்கு அறிவிப்பதற்காக அதிகாரசபையினால் 191 தகவல் (Informative) நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தது. ஆனால், 46 முகாமைத்துவக் குழுக்கள் மாத்திரம் பதிவுசெய்யப்பட்டிருந்தது. அதற்கமைய, அடையப்பட்ட இலக்கு 45 சதவீதமாக மாத்திரம் காணப்பட்டது.

(ii) முகாமைத்துவக் கூட்டிணைப்பு குழுக்களின் பதிவுசெய்தல் செயற்பாடுகள் மற்றும் பதிவுகளினை செயற்படுத்தல் மூலம் முறையே அரச , தனியார் மற்றும் சுனாமி கூட்டு ஆதனங்களிலிருந்து ரூபா 245,000, ரூபா 1,120,000 மற்றும் ரூபா 350,000 வருமானத்தை உருவாக்க திட்டமிட்டிருந்தது. இருப்பினும், சுனாமி கூட்டு ஆதனம் தொடர்பில் கூட்டுத்தாபனங்களின் முறையற்ற ஸ்தாபிப்பு காரணமாக எவ்வித வருமானமும் உழைக்கப்பட்டிருக்காததுடன் அரச துறையிடமிருந்து வருமானம் ரூபா 95,868 தொகையொன்று மாத்திரம் உழைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2017 ஆம் ஆண்டின் போது முறைப்பாடுகளுக்கான 120 கட்டளைகளினை விநியோகிப்பதற்கு அதிகாரசபை திட்டமிட்டிருந்த போதிலும், 82 முறைப்பாடுகள் மாத்திரம் தீர்க்கப்பட்டிருந்தது.

(இ) 2015 ஆம் ஆண்டின் போது, 1973 இன் 10 ஆம் இலக்க கூட்டு ஆதன முகாமைத்துவ சபை சட்டம் மற்றும் 1973 இன் 11 ஆம் இலக்க குடியிருப்புக்கள் உரிமைத்துவ சட்டத்தின் செயற்பாடுகளின் திருத்தங்களினை பூர்த்திசெய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், அந்த செயற்பாடுகள் இலக்கிடப்பட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையினால், காலப்பகுதி 2017 ஆம் ஆண்டு வரை நீடிப்புச்செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்தச் சட்டங்களினை சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு முன்னோக்கி அனுப்புதல் மீளாய்வாண்டின் இறுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது 160 கூட்டு ஆதனங்களினை காப்புறுதி செய்வதற்கு மற்றும் 40 அங்கீகரிக்கப்படாத நிர்மாணங்களினை அகற்றுவதற்கு மற்றும் அவற்றிற்கு ஏற்பட்ட செலவினங்களினை தொடர்புடைய தரப்பினர்களிடமிருந்து அறவிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், எவ்வித ஆதனமும் காப்புறுதி செய்யப்பட்டிருக்கவில்லை. காப்புறுதி செயற்பாடுகளின் முகாமைத்துவத்தினை நோக்கியதாக பழைய அரச காப்புறுதி திட்டங்களினை முகாமைத்துவ கூட்டுத்தாபனங்கள் செயற்படுத்தாமை, காப்புறுதி தொழிற்பாடுகள் செயற்பாடற்றுக் காணப்பட்டமை மற்றும் தனியார் துறை வீடமைப்பு திட்டங்களின் காப்புறுதி செயற்பாடுகள் வினைத்திறனாக செயலாற்றியமை போன்ற காரணங்கள் காரணமாக மற்றும் 04 அங்கீகரிக்கப்படாத நிர்மாணங்கள் அகற்றப்பட்டிருந்ததென 2018 ஆகஸ்ட் 20 இல் அதிகாரசபையின் தலைவர் எனக்கு அறிவித்திருந்தார்.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது தேசிய வீடமைப்பு அதிகாரசபைக்கு அதிகாரசபையினால் ரூபா 15,559,519 தொகையான வீட்டு வாடகைகள் செலுத்தப்பட்டிருந்த போதிலும், வாடகை உடன்படிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபையின் அலுவலக கட்டிடத்தின் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு மற்றும் அலுவலக வளாகத்தில் கேரேஜ் (garage) ஒன்றின் நிர்மாணத்திற்கு மீளாய்வாண்டின் அதிகாரசபைக்கு ரூபா 1,202,084 தொகையொன்று ஏற்பட்டிருந்த போதிலும், வீடமைப்பு அதிகாரசபைக்கு செலுத்தப்பட்ட அந்த வாடகையிலிருந்து பணத்தினை அறவிடுவதற்கு அல்லது அவற்றின் மீது நடவடிக்கை எடுப்பதற்கு அல்லது உடன்படிக்கையொன்றை கைச்சாத்திடுவதற்கு அதிகாரசபை நடவடிக்கைகளினை எடுத்திருக்கவில்லை.

### 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

1973 இன் 10 ஆம் இலக்க கூட்டு ஆதன அதிகாரசபை சட்டத்தின் பிரகாரம், அதிகாரசபை கூட்டு ஆதனங்களின் முகாமைத்துவ கூட்டிணைப்பு செயற்பாடுகளினை செயற்படுத்தல் வேண்டும். எவ்வாறாயினும், அதிகாரசபையினால் ஸ்தாபிக்கப்பட்டிருந்த 936 முகாமைத்துவ கூட்டிணைப்புக்களில் 364 அல்லது 39 சதவீத முகாமைத்துவ கூட்டிணைப்புக்கள் செயற்பாடற்றவையாக மாறியது.

### 4.4 நிதிகளின் குறைப்பாடு

அதிகாரசபையின் மூலதன செயற்திட்டங்களினை நடாத்துவதற்கு பெறப்பட்ட வருடாந்த மூலதன மானி யங்கள் தொடர்புடைய ஆண்டுகளில் தொடர்புடைய செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் அந்த மானியங்கள் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. 2017 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கு பெறப்பட்ட அவ்வாறான மானியங்கள் முறையே ரூபா 25,421,000 மற்றும் ரூபா 42,209,311 தொகையாகக் காணப்பட்டது. ஒப்பந்தகாரர் தொடர்புடைய வேலைகளினை மேற்கொண்டிருக்காமையின் விளைவொன்றாக, நிதிகள் சேமிக்கப்பட்டிருந்ததுடன் அமைச்சிற்கு நிதிகளினை

விடுவிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமென 2018 ஆகஸ்ட் 20 இல் தலைவர் எனக்கு அறிவித்திருந்தார்.

**4.5 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் கொள்வனவுசெய்யப்பட்ட வர்ணப்பூச்சுக்களின் 18 லீற்றர்கள் மற்றும் 2007 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரை கொள்வனவுசெய்யப்பட்ட 25 வகைகளுக்குச் சொந்தமான 207 மின்சார மற்றும் நீர் குழாய் உதிரிப்பாகங்கள் பயன்படுத்தப்பட்டிராது களஞ்சிங்களில் வைக்கப்பட்டிருந்தது. அந்த வகைகள் தேவையின் பிரகாரம் விநியோகிக்கப்படுமென 2018 ஆகஸ்ட் 20 இல் தலைவர் எனக்கு அறிவித்திருந்தார்.

**4.6 பதவியணியினர் நிர்வாகம்**

மீளாய்வாண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் முறையே 139 மற்றும் 115 ஆகக் காணப்பட்டதுடன் இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், நிறுவன கட்டமைப்பு மற்றும் அதிகாரசபையின் ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம், சட்டச் செயற்பாடுகளுக்கு இரண்டு உதவி பொது முகாமையாளர் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஒரு பதவிக்கு ஒரு சட்ட உத்தியோகத்தர் மாத்திரம் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தார். தேவைப்பாட்டினை இனங்கண்ட பின்னர் நிரந்தரமானதொரு சட்ட உத்தியோகத்தரொருவரை ஆட்சேர்ப்பதற்குப் பதிலாக, 2008 ஆம் ஆண்டிலிருந்து நாள் செலுத்துகையின் அடிப்படையில் வெளிவாரியான சட்ட உத்தியோகத்தரொருவரிடமிருந்து சட்ட சேவை பெறப்பட்டிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டில் குறித்த சட்ட உத்தியோகத்தரினால் அளிக்கப்பட்ட சேவைகளுக்காக சபையின் அங்கீகாரத்துடன் ரூபா 554,000 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. கள செயற்பாடுகளுக்கு அனுபவம்வாய்ந்த சட்ட உத்தியோகத்தரொருவரின் ஆட்சேர்ப்புக்கான தேவை இனங்காணப்பட்டபோதிலும், அதிகாரசபையின் சம்பள அளவுத்திட்டங்களுக்கு அனுபவம்வாய்ந்த சட்ட உத்தியோகத்தரொருவரை ஆட்சேர்ப்புச்செய்வது கடினமானதாகக் காணப்பட்டதென தலைவர் அறிவித்திருந்தார். ஆகையினால், பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் தற்காலிக வழக்கறிஞர் ஒருவரிடமிருந்து சேவை பெறப்பட்டிருந்தது.

(ஆ) அதிகாரசபையின் பிரதி பொது முகாமையாளர் பதவி 01, உதவி பொது முகாமையாளரின் 05 பதவிகள் மற்றும் 13 ஏனைய பதவிகள் நீண்டகாலப்பகுதியொன்றுக்கு தொடர்ந்தும் வெற்றிடமாகக் காணப்படுகின்றது. ஆகையினால், இந்த நிலைமை அதிகாரசபையின் செயலாற்றலில் நேரடியாக தாக்கமளித்திருந்ததுடன் கணக்காய்வில் ஒழுங்குபடுத்த முடியாது காணப்பட்டது.

**5. நிலைபேறான அபிவிருத்தி**

**5.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளினை அடைந்துகொள்ளல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அனைத்து பொது நிறுவனங்கள் மற்றும் கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபையினால் பின்பற்றப்படவேண்டிய 2030 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கான ''நிகழ்ச்சி நிரல்'' பற்றிய அதிகாரசபையின் பரப்பெல்லை தொடர்பில் மீளாய்வாண்டிற்கு செயற்படுத்தப்படவேண்டிய செயற்பாடுகள் பற்றி விழிப்புணர்வு காணப்பட்டது. எவ்வாறாயினும், நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளினை அடைந்துகொள்வதற்கான செயலாற்றல் குறிகாட்டிகளினை இனங்காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கூட்டு ஆதனங்களின் பொதுப் பயன்பாடுகள் மற்றும் பொது வசதிகளின் முறையான பராமரிப்பு, நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ தொழிற்பாடுகளுக்கான வழிகாட்டல்களினை இனங்காணுதல் மற்றும் தொடர்புடைய தொழிற்பாடுகளினை மேற்பார்வை செய்தல் என்பன கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபையினால் அடைந்துகொள்ளப்படவேண்டிய பிரதான நிலைபேறான இலக்குகளாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், செயலாற்றலினை கண்காணிக்கும் பொருட்டு துல்லியமான தரவுத் தளத்தை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. தகைமைவாய்ந்த உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை இந்த நிலைமைக்கு பிரதான காரணங்களாகக் காணப்பட்டது.

(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளினை அடைந்துகொள்ளும்பொருட்டு ஏனைய நிறுவகங்களுக்கிடையிலான வேண்டப்படும் ஒருங்கிணைப்பின் பற்றாக்குறை காரணமாக, திட்டமிடல் செயன்முறை மற்றும் முன்தயாரிப்பு செயற்பாடுகள் என்பன பலவீனமான மட்டத்தில் காணப்பட்டடை அவதானிக்கப்பட்டது.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 பெறுகைகள் மற்றும் ஒப்பந்தங்களின் செயன்முறை

#### 6.1.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 சனவரி 25 ஆந் திகதிய அரச பெறுகை வழிகாட்டலில் வழங்கப்பட்ட 4.2.1 ஆம் வடிவத்தின் பிரகாரம் அதிகாரசபையினால் விபரமானதொரு பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஹதரகம சுற்றுலா விடுதியின் புனர்நிர்மாணத்திற்கு விலைமனுக்களினை அழைக்கையில், அரச பெறுகை வழிகாட்டலின் 5.2.1 ஆம் பிரிவின் பிரகாரம், விலைமனு அழைப்பு பதிவேட்டில் சுட்டிக்காட்டப்பட்ட ஆவணங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) விபரக்குறிப்புக்களினை தயாரித்திராது, மீளாய்வாண்டின் போது ரூபா 177,390 இற்கு அதிகாரசபையினால் 04 அச்சு இயந்திரங்கள் கொள்வனவுசெய்யப்பட்டிருந்தது. மேலும், அந்த பெறுகை தொடர்பில் பெறுகை மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுக்களின் பரிந்துரைகள் மற்றும் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2017 ஆம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட பெறுகைத் திட்டத்திற்கு திருத்தங்களினை மேற்கொண்டிராது, திட்டத்தில் உள்ளடக்கப்படாத ரூபா 3,542,806 கூட்டுத்தொகையொன்றையுடைய பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(உ) 2017 மற்றும் 2016 ஆம் ஆண்டின் பெறுகைத் திட்டங்களினூடாக அலுவலக கட்டிடத்தின் நிர்மாணத்திற்கு காணியொன்றின் கொள்வனவுக்கு திட்டமிடப்பட்டிருந்தபோதிலும், அந்தப் பெறுகை மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. இது 2018 ஆம் ஆண்டின் பெறுகைத் திட்டத்தில் கூட உள்ளடக்கப்பட்டுக் காணப்பட்டது.

(ஊ) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 5.2 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் பெறுகைத்திட்டம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**6.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான தொகைகளுக்கிடையே 26 சதவீதம் தொடக்கம் 307 சதவீதம் வரையான வீச்சில் வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டமையினால், பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் வினைத்திறனான கருவியொன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

**6.3 வருடாந்த அறிக்கைகளினை சமர்ப்பித்தல்**

2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கைகள் 2018 யூலை வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் காலத்திற்கு காலம் அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்பாடுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் | | அவதானிப்புகள் |
|---|---|---|---|
| (அ) | கூட்டு ஆதன முகாமைத்துவம் | - | முகாமைத்துவ கூட்டிணைப்புக்களின் மேற்பார்வை முறைப்படி மேற்கொள்ளப்பட்டிருக்காமை |
| | | - | கூட்டாச்சி ஆதனங்களின் இடமாற்ற செயற்பாடுகளினை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை. |
| | | - | அங்கீகாரமற்ற நிர்மாணங்களுடன் தொடர்புடைய ஆவணங்கள் பேணப்பட்டிருக்காமை. |
| (ஆ) | கட்டுநிதிக் கட்டுப்பாடு | - | முற்பணங்களினை தீர்ப்பனவுசெய்வதில் தாமதங்கள் |
| | | - | முன்பு பெறப்பட்ட முற்பணங்களினை தீர்ப்பனவு செய்வதற்கு முன்னர், அதே உத்தியோகத்தர்களுக்கு முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தமை. |
| | | - | பதவிநிலை தரமற்ற உத்தியோகத்தர்களுக்கு முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தமை |
| | | - | மீளாய்வாண்டில் வழங்கப்பட்ட முற்பணங்கள் 2018 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்பட்டிருந்தது. |
| (இ) | செயற்பாட்டுக் கட்டுப்பாடுகள் | - | ஏற்றக்கொள்ளப்பட்ட முறையொன்றில் ஒவ்வொரு பெறுகையினையும் தனித்தனியாக இனங்காணும் பொருட்டு பெறுகைக் கோவைகள் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | இருப்புக் கட்டுப்பாடு | - | ஒவ்வொரு பிரிவுகளுக்குமாக தனித்தனியான இருப்பு பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. |